# பத்திரிக்கைச் செய்தி

## பி.எம்.கிசான் நிதி ஆண்டுக்கு ரூ. 6000/- தொடர்ந்து பெறுவதற்கு நிலஉடைமை பதிவு கட்டாயம்

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN) –இல் இனிவரும் காலங்களில் தவணைத் தொகைகளை பெறுவதற்கும், உரம் மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கும் விவசாயிகள் தங்கள் நில விவரங்களை பதிவு செய்து அடையாள எண் பெறுவது கட்டாயமாகும் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திருமதி. மு. சங்கரலட்சுமி அவர்கள் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளின் நலனை பாதுகாக்கவும், அரசின் திட்டங்கள் நேரிடையாக தகுதியுள்ள பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்யவும், விவசாயிகளின் நில உடைமை விவரங்களை பதிவு செய்து அடையாள எண் வழங்கப்பட்டு வருகிறது. விவசாய அடையாள எண் இதுவரை பெறாத விவசாயிகளுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் மே 9-ஆம் தேதி முதல் அனைத்து வட்டாரங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. இந்த விவசாயிகளின் நில உடைமை விவரங்களை பதிவு செய்து அடையாள எண் வழங்கும் சிறப்பு முகாம்களில் இதுவரை பதிவு செய்திடாத விவசாயிகள் அவர்களின் ஆதார் அட்டை மற்றும் நில ஆவணங்களான பட்டா மற்றும் சிட்டா, ஆதாருடன் இணைக்கப்பட்ட அலைபேசி எண் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு தங்கள் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு சென்று விவசாயி அடையாள எண் பெற இணையதளத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இனி வரும் காலங்களில் விவசாயி அடையாள எண் வைத்துள்ள விவசாயிகளுக்கு மட்டுமே பி.எம்.கிசான் கவுரவ நிதி திட்டத்தில் வழங்கப்படும் வருடத்திற்கு ரூ.6000/- உதவித்தொகை, மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களின் மானியங்கள், மானிய உரங்கள், மானிய விலையில் விதைகள், பயிர் காப்பீடு, இயற்கை பேரிடர் நிவாரணத்தொகை மற்றும் அரசின் இதர மானியங்கள் வழங்கப்படும்.

மேலும், விவசாயிகள் தங்களது பகுதி வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, அட்மா திட்ட பணியாளர்கள் ஆகிய துறை சார்ந்த அலுவலர்கள் அல்லது அருகில் உள்ள பொது சேவை மையங்களை நேரடியாக அணுகி தங்கள் நில உடைமை விவரங்கள், ஆதார், கைபேசி எண் ஆகிய விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி உடனடியாக பதிவு செய்து கொள்ளலாம்.

எனவே, விவசாயிகள் கிராம அளவில் நடைபெறும் விவசாய அடையாள எண் பெறுவதற்கு நில உடைமை பதிவு சிறப்பு முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திருமதி. மு. சங்கரலட்சுமி அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஒம்/- மு. சங்கரலட்சுமி,
வேளாண்மை இணை இயக்குநர்,
புதுக்கோட்டை